நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## விதை விதைக்கும் கருவி மூலம் முன்பருவ விதைப்பு

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் விதை விதைக்கும் கருவி மூலம் முன்பருவ விதைப்பு செய்திட அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருவதாக வேளாண்மை இணை இயக்குநர் கு.சௌந்தர்ராஜன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் 1.30லட்சம் ஹெக்டேர் நெல் பரப்பில் ஏறத்தாழ 95 சதவீதம் வடகிழக்கு பருவ மழையை நம்பி, முன்பருவ விதைப்பாக விதைக்கப்படுகிறது. மானாவாரி நெல் சாகுபடியில் நெல் உற்பத்தியை பெருக்கிட விவசாயிகளுக்கு பல்வேறு சாகுபடி தொழில் நுட்பங்களை தெரியப்படுத்தி வருகிறோம்.

மானாவாரி முன்பருவ விதைப்பில் விதை விதைப்புக் கருவி மூலம் நெல் விதைகளை முன்பருவ விதைப்பு செய்யலாம்.

ஆட்சியரின் அறிவுரையின்படி ராமநாதபுரம் மாவட்டத்தின் முன்பருவ விதைப்பாக நெல்சாகுபடி பரப்பில் ஆயிரம் ஹெக்டேர் பரப்பு விதை விதைக்கும் கருவி மூலம் நெல் விதைப்பு செய்திட அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருகின்றது.

சாதாரண நெல் விதைப்பில் ஏக்கருக்கு 30 கிலோ நெல் விதைகள் தேவைப்படுகிறது.ஆனால் விதை விதைக்கும் கருவி மூலம் விதைத்தால் 16லிருந்து 20 கிலோ விதைகள் போதுமானது. கருவி மூலம் விதைப்பதால் பயிர்களின் எண்ணிக்கையை தேவையான அளவு பராமரிப்பதோடு கூடுதலாக 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை மகசூலும் கிடைக்கிறது.

கடந்த ஆண்டில் திருவாடானை,பரமக்குடி,ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் போகலூர் வட்டாரங்களில் நெல் விதைகளை முன்பருவ விதைப்பு செய்த விவசாயிகள் கூடுதல் மகசூல் கிடைக்கப் பெற்றனர்.

எனவே இந்த சாகுபடி தொழில் நுட்பத்தை அனைத்து விவசாயிகளும் பின்பற்றி மானாவாரி நெல் சாகுபடியில் அதிகஅளவு நெல் உற்பத்தி செய்து பயனடைந்திட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விதை விதைக்கும் கருவி செயல்படும் விதம் குறித்து அனைத்து வட்டாரங்களிலும் 50 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது என வேளாண்மை இணை இயக்குநர் கு.சௌந்தர்ராஜன் தெரிவித்தார்.

## 15 ஆயிரம் டன் உரம் இருப்பு

விவசாயிகளுக்கு தேவையான உர வகைகளில் மொத்தம் 15 ஆயிரம் மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டிருப்பதாக ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கு.சௌந்தர்ராஜன் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ராமநாதபுரம் ஆட்சியர் க.நந்தகுமார் உத்தரவின்படி வேளாண்மைத்துறை,கூட்டுறவுத்துறை,டான்பெட் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து மாவட்டத்தில் உள்ள 131 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் உரங்கள் இருப்பு வைக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நடப்பு பருவத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு

கடன் சங்கங்களில் யூரியா 8000 மெட்ரிக் டன், டி.ஏ.பி. 2800 மெட்ரிக்டன், பொட்டாஷ் 200 மெட்ரிக்டன் மற்றும் கலப்பு உரங்கள் 4000 மெட்ரிக்டன் ஆக மொத்தம் 15 ஆயிரம் மெட்ரிக்டன் உரம் இருப்பு வைக்க ஆட்சியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தை பொறுத்தவரை விவசாயப்பணிகள் அனைத்தும் வடகிழக்கு பருவமழையை நம்பியே துவங்குகிறது. இவற்றில் நெற்பயிர் மட்டும் 70 சதவீதம்.

1.30,000ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் ஏறத்தாழ 74ஆயிரம் ஹெக்டேர் முழுவதும் வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து முன் பருவ விதைப்பாக செப்.15ஆம் தேதி முதல் விவசாயிகளால் விதைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 54 ஆயிரம் ஹெக்டேர் பாசனம் செய்யக் கூடிய கண்மாய் ஆயக்கட்டு பகுதிகளில் மானாவாரியாக பயிரிடப்படுகிறது.

இந்நிதியாண்டின் உரத்தேவை 45,520மெ.டன் என கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் கூட்டுறவு சங்கங்களில் மட்டும் 15 ஆயிரம் மெட்ரிக் டன்னும், தனியார் உர விற்பனையாளர்கள் மூலம் 35520 மெட்ரிக் டன்னும் உர விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 15 ஆயிரம் மெ.டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே வேளாண்மைத்துறையின் அறிவுரைகளின்படியும்,மண் பரிசோதனை ஆய்வு முடிவுகளின்படியும் உரங்கள் இட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனியார் உரக்கடைகளில் உரங்கள் இருப்பு விபரத்தை தகவல் பலகையில் விவசாயிகளுக்கு தெரியும் வண்ணம் எழுதி வைக்க வேண்டும்.

உரங்களுக்கு கண்டிப்பாக ரசீது வழங்க வேண்டும். உரக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறும் தனியார் உர விற்பனையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆழ்குழாய் கிணறு அமைக்க மானியம்:விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

தானே' மறுவாழ்வுத் திட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ராஜேந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் "தானே' புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு முந்திரி மரங்களை வெட்டி அகற்றிய நிலையில் புதிதாக விவசாயப் பணிகளை மேற்கொள்ள ஆழ்குழாய் கிணறு மானியத்தில் அமைத்து தரப்படுகிறது.

கூட்டுப் பொறுப்பு குழு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும், தனி நபர் விவசாயிக்கு 50 சதவீத மானியத்திலும் ஆழ்குழாய் கிணறு வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் அமைத்து தரும் பணி நடைபெற்று வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் 50 கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கும் 200 தனிநபர் விவசாயிகளுக்கும் ஆழ்குழாய் கிணறு அமைத்துத் தர அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக கூட்டுப் பொறுப்புக் குழு விவசாயிகள் தங்கள் பங்குத்தொகையாக ரூ.1.9 லட்சமும், தனிநபர் விவசாயிகள் ரூ.3.8 லட்சமும் பங்குத்தொகையாக செலுத்த வேண்டும். ஆழ்குழாய் அமைக்கும் விவசாயிகளுக்கு வங்கிக் கடன் ஏற்பாடு செய்து தரப்படுகிறது.

மேலும் சொட்டு நீர்ப் பாசன திட்டத்திலும் முந்திரி கன்றுகள் நடவு செய்து பயன்பெற மானியம் வழங்கப்படுகிறது.

இதன்படி சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், பெருவிவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

ஆழ்குழாய் அமைக்கும் பணிகள் வேளாண் பொறியியல் துறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. டிசம்பர் மாதத்துக்குள் திட்டத்தை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே முந்திரி விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பங்குத் தொகையை செலுத்தி ஆழ்குழாய் அமைக்கும் திட்டத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

## காவிரி - பாலாறு இணைப்பு அவசியம்:விஸ்வநாதன் எம்.பி. வலியுறுத்தல்

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் காவிரி - பாலாறு ஆகிய ஆறுகளை இணைக்க வேண்டும் என்று பெ.விஸ்வநாதன் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை (செப். 5) நாடாளுமன்றத்தில் விதி எண் 377-ன் கீழ் தாக்கல் செய்த அறிக்கை:

தமிழகத்தின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் காவிரி ஆற்றில் உள்ள மேட்டூர் அணை 1924-ஆம் ஆண்டு முதல் 2013-ம் ஆண்டு வரை 39 முறை அதன் முழு கொள்ளளவைத் தாண்டியுள்ளது. இதனால் வெள்ளக்காலங்களில் அதன் உபரி நீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இதனைத் தடுக்க காவிரி - பாலாறு இணைப்பு அவசியம் ஆகும்.

ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றில் புதிய அணையினைக் கட்டி நீரை சேமிக்க வேண்டும். இதன் மூலம் 720 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். மேலும் காவிரி நீரை அவரங்கும்பம் கால்வாய் வழியாக பாலாற்றில் இணைக்க முடியும். இதன் மூலம் காஞ்சிபுரம், வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் சுமார் 1.5 கோடி பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கும். மேலும் காஞ்சிபுரம் மாவட்டத்திலும் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும்.

எனவே இந்த விவகாரத்தில் மத்திய நீர்பாசனத்துறை அமைச்சர் ஹரிஷ்ராவத் கவனம் செலுத்தி, காவிரி நீரை பாலாற்றில் இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 82.09 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 82.09 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,450 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,897 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,400 கனஅடி நீரும் திறந்து விடப்பட்டது. நீர் இருப்பு 16.81 டி.எம்.சி.

## நேரடி நெல் விதைப்பு முறை:விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கக் கோரிக்கை

நேரடி நெல் விதைப்பு முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இச் சங்கத் தலைவர் செ.நல்லசாமி, சிவகிரியில் நிருபர்களிடம் கூறியது: நடப்பு பாசன பருவத்தில் பெரும்பாலான டெல்டா மாவட்ட விவசாயிகள் நேரடி நெல் விதைப்புக்கு மாறியுள்ளனர். விவசாய வேலைகளுக்கு ஆள்கள் கிடைக்காததால், நாற்றங்காலிலிருந்து நாற்றைப் பறித்து நடவு செய்யும் முறையை மாற்றி நேரடி நெல் விதைப்பு முறைக்கு மாறியுள்ளனர். இதில் வேலைப் பளுவும் குறைவு. சாகுபடி செலவும் குறைவு.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி, பயிர் பாதியில் காய்ந்து போனது போன்ற காரணங்களால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். இதனால் நடப்பாண்டு சாகுபடிக்கான பராமரிப்பு செலவின்றி விவசாயிகள் இருப்பதும், இந்நிலைக்கு மாற முக்கிய காரணங்களாகும். டெல்டா மாவட்டங்களுக்கு பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டும், அப்பகுதிகளில் நூறு நாள் வேலை உறுதி

திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருப்பதும் விவசாயப் பணிகளுக்கு ஆள்கள் கிடைக்காமல் போனதற்கு முக்கியக் காரணமாகும்.

இதேநிலை தான் கீழ்பவானி பாசனப் பகுதிகளிலும் உள்ளது. கடந்த ஆண்டு கீழ் பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் நிலுவையில் இருந்த பயிர்களும் காய்ந்து போகின. தோப்பு தோப்பாக தென்னை மரங்களும் காய்ந்து விட்டன.

இதனால் நடப்பு ஆண்டில் நெல் சாகுபடி பரப்பளவு அதிகரித்து இருக்கும். கீழ் பவானி பாசன விவாயிகள் பலருக்கு நேரடி நெல் விதைப்பு குறித்து தெரியாது. இப்பாசன பகுதியில் இதை அறிமுகப்படுத்துவதும், அதற்கான பயிற்சி அளிக்கப்படுவதும் காலத்தின் கட்டாயமாகும்.

மேலும் நேரடி நெல் விதைப்பால் விளைச்சல் குறையாது. எனவே வேளாண் துறையும், மாவட்ட நிர்வாகமும் தனிக்கவனம் செலுத்தி, நேரடி நெல் விதைப்புக்கு பயிற்சி அளிக்க முன்வர வேண்டும் என்றார்.

## குடியாத்தத்தில் 23 மி.மீ. மழை

வேலூர் மாவட்டத்தில் புதன்கிழமை இரவு அதிக அளவாக குடியாத்தத்தில் 23.1 மி.மீ. மழை பதிவானது.

வேலூர், காட்பாடி, ஒடுக்கத்தூர், வாலாஜாபேட்டை, ஆம்பூர், பள்ளிகொண்டா, வாணியம்பாடி, குடியாத்தம், சோளிங்கர் உள்ளிட்ட இடங்களில் இரவு விட்டுவிட்டு மழை பெய்தது. இதில் வியாழக்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழை (மி.மீட்டரில்):

சோளிங்கர் 7, வாலாஜா 5, வேலூர் 6.2, மேல் ஆலத்தூர் 7.2, ஆற்காடு 6.2, ஆலங்காயம் 1.8, குடியாத்தம் 23.1.

## சேத்துப்பட்டில் 235 பண்ணைக் குட்டைகள்

சேத்துப்பட்டு பகுதியில் வேளாண்மை துறை சார்பில் சிறு, குறு விவசாயிகளுக்கு 235 பண்ணை குட்டைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தகுதியுடைய நபர்கள் மனு செய்யலாம்.

சேத்துப்பட்டை அடுத்த கரைப்பூண்டி வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தில் விவசாயிகளுக்கு உழவர் ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டது. இந்த கையேடு அடுத்த 2014, 2015, 2016 என 3 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம்.

இதன் மூலம் மானியத்தில் மண் மாதிரி,உரம், விதை, வேளாண் இடுபொருள்கள் பெற்றுக் கொள்ளலாம். மண் மாதிரிக்கு ரூ. 20 மட்டும் கட்டணம் செலுத்த வேண்டும். விவசாயிகளுக்கு மானிய விலையில் உளுந்து விதைகள் வழங்கப்பட்டன.

இலவசமாக பண்ணைக்குட்டை அமைக்க மனுக்கள் பெறப்பட்டன. சேத்துப்பட்டு பகுதியில் வேளாண்மை துறை சார்பில் சிறு, குறு விவசாயிகளுக்கு மொத்தம் 235 பண்ணை குட்டைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தகுதியுடைய நபர்கள் மனு செய்யலாம். இந்த பண்ணை குட்டையின் அருகில் மரம் வளர்க்கலாம். மேலும் இந்தக் குட்டைகளில் வளர்க்க மீன்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு உழவர் ஒருங்கிணைந்த கையேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை வழங்கினார். வேளாண்மை அலுவலர் அகிலாதேவி, துணை வேளாண்மை அலுவலர் ராஜன், விரிவாக்க உதவியாளர் ஏழுமலை உடனிருந்தனர்.

## மழையால் ஏலத்துக்கு பருத்தி வரத்து குறைவு

பரவலாக ஆங்காங்கே பெய்து வரும் மழை காரணமாக, நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு பருத்தி வரத்து மிகவும் குறைந்து காணப்பட்டது.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த வாரம் (செப்.5) நடைபெற்ற ஏலத்துக்கு 500 மூட்டை பருத்திகளே வந்திருந்தன. அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.5550 முதல் ரூ.6350 வரையும், சுரபி ரகம் குவிண்டால் ரூ.5750 முதல் ரூ.6350 வரையும் என மொத்தம் ரூ.8 லட்சத்துக்கு விற்பனையாகியது.

கடந்த வாரம் (ஆக.29) நடைபெற்ற ஏலத்துக்கு வரப்பெற்ற ஆயிரம் மூட்டை பருத்திகளில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.5600 முதல் ரூ.6300 வரையும், சுரபி ரகம் குவிண்டால் ரூ.5800 முதல் ரூ.6350 வரையும் என மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு விற்பனையாகியது. அதற்கு முந்தைய வாரம் (ஆக.22) நடைபெற்ற ஏலத்துக்கு 1500 மூட்டை பருத்திகள் வரப்பெற்று, ரூ.15 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

அதன்படி, கடந்த இரு வாரங்களைவிட இந்த வாரம் பருத்தி மூட்டைகளின் வரவு மிகவும் குறைந்ததற்கு பரவலாக ஆங்காங்கே பெய்து வரும் மழையே காரணம் எனக் கூறப்படுகிறது. கடந்த வாரம் பெய்த மழையால் ஏலத்துக்கு வந்திருந்த பருத்தி மூட்டைகள் சற்று பாதிக்கப்பட்டன.

இதேபோல, இந்த வாரமும் மழை பெய்து பருத்தி மூட்டைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க விவசாயிகள் ஏலத்துக்கு பருத்தி மூட்டைகளை கொண்டு வருவதைக் குறைத்திருக்கலாம் என வேளாண் விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

## விதைக் கிராமத் திட்ட பயிற்சி முகாம்

திருச்செங்கோடு வட்டாரத்தில் விதைக் கிராமத் திட்டப் பயிற்சி முகாம்கள் நடைபெற உள்ளன.

இதுகுறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் நமச்சிவாயம் கூறியது:

திருச்செங்கோடு வட்டாரத்தில் 2013-2014ஆம் ஆண்டுக்கான விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான முதல் கட்டப் பயிற்சி நடைபெற உள்ளது.

பயறு வகை விதை கிராமத் திட்டப் பயிற்சி வருகிற 5ஆம் தேதி இறையமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திலும், 6ஆம் தேதி வட்டூர் கிராமத்திலும் நடைபெறுகின்றன.

எண்ணெய் வித்து பயிர்களுக்கான பயிற்சி முகாம் 16ஆம் தேதி விட்டம்பாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்க வளாகத்திலும், 17ஆம் தேதி சிறுமொளசியிலும், 23ஆம் தேதி ஆனங்கூரிலும் நடைபெறுகின்றன.

இந்தப் பயிற்சியில் அந்தந்த பகுதி விவசாயிகள் கலந்து கொண்டு விதை தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

## குளிர்பதனக் கிடங்கு அமைக்க தோட்டக்கலைத் துறை மானியம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறை சார்பில், குளிர்பதனக் கிடங்கு அமைக்க மானியம் வழங்கப்படும் என, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் பெரியசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலர் பயிர்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. மலர்களில் ரோஜா முக்கிய இடத்தைப் பெறுகிறது. சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் பசுமைக் குடில் அமைக்கப்பட்டு, ரோஜா மலர், சூளகிரி, ஒசூர், கெலமங்கலம் மற்றும் தளி வட்டாரங்களில் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.

ரோஜா மலர்களைப் பறித்தவுடன் விற்பனை செய்யாமல், குளிர்பதனக் கிடங்கில் 15 நாள்கள் வரை வைத்திருந்து நல்ல விலைக்கு விற்க முடியும். குளிர்பதனக் கிடங்கில் ரோஜாவை வைத்து விற்பதால், பூவின் தரமும், பூவின் பருமனும் நன்றாக இருப்பதுடன், அதிக விலைக்கு விற்பனையாகும். இதை ஊக்குவிக்கத் தோட்டக்கலைத் துறை மூலம் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அதிகபட்சமாக 40 சத மானியம் ரூ. 6 லட்சம் வரை வழங்கப்பட உள்ளது. திட்ட வடிவில் வங்கி மூலம் கடன் பெற்று, இந்த மானியத்தை ரோஜா சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், இதுதொடர்பாக, அனைத்து வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொண்டு விவசாயிகள் பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பாவுக்கு போதியளவு உரங்கள் இருப்பில் உள்ளன

சம்பா மற்றும் தாளடிக்கு போதியளவு உரங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ். தாமோதரன் தெரிவித்தார்.

திருச்சி, கரூர், அரியலூர் மாவட்டங்களின் சம்பா- தாளடி சாகுபடி முன்னேற்பாடுகள் குறித்து திருச்சியில் விவசாயிகளுடன் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

நிகழாண்டில், காவிரியாற்றில் உரிய நேரத்தில் குறுவைக்கு பாசன நீர் கிடைக்காததால் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தை அறிவித்து ரூ. 18 கோடி நிதியையும் முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன்படி, திருச்சி மாவட்டத்திற்கு ரூ. 74.6 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ள 8,577 ஏக்கருக்குரிய 3,872 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு இதில் 5,000 ஏக்கருக்குரிய விவசாயிகளுக்கு உயிர் உரங்கள், நுண்சத்து மற்றும் தாவரப் பூச்சிக் கொல்லி மருந்துகள், 1,500 ஏக்கருக்கு ஜிப்சம் மற்றும் பாசன நீர் விரயமாவதைத் தடுக்க ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 180 மீட்டர் நீளத்துக்கு 325 யூனிட் பைப்புகள் விலையேதுமின்றி வழங்கப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் சம்பா பயிர் சாகுபடி டெல்டா பகுதிகளில் 92,200 ஏக்கரிலும், இதர பகுதிகளில் 57,800 ஏக்கரிலும் செய்யப்படவுள்ளது.

இதில் 90, 000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறை பின்பற்றப்படவுள்ளது.

கடந்த ஆக. 2-ஆம் தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி விதைகள், உரங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சம்பா பருவத்துக்கு தேவையான உரங்களான யூரியா 7,417 மெட்ரிக் டன், டிஏபி 5,875 மெட்ரிக் டன், பொட்டாஷ் 3,334 மெட்ரிக் டன் மற்றும் கலப்பு உரம் 6,242 மெட்ரிக் டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களிலும் மற்றும்

தனியார் உரக்கடைகளிலும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார் தாமோதரன்.

கூட்டத்தில், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி, அரசுத் தலைமைக் கொறடா ஆர். மனோகரன், அரசு முதன்மைச் செயலர் மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா, வேளாண்மைத் துறை இயக்குநர் மு. ராஜேந்திரன்,

மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன், எம்எல்ஏக்கள் மு. பரஞ்ஜோதி, என்.ஆர். சிவபதி, ஆர். சந்திரசேகர், மாவட்ட ஊராட்சித் தலைவர் தி. ராஜாத்தி ஆகியோர் பங்கேற்றனர்.

விவசாய சங்கங்களின் சார்பில் காந்திபித்தன், பொ. அய்யாக்கண்ணு, சி.மாசிலாமணி, புலியூர் நாகராஜன், அயிலை சிவசூரியன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

## குறுவை, சம்பாவுக்கு போதியளவு உரங்கள் இருப்பில் உள்ளன வேளாண்மைத் துறை அமைச்சர் தாமோதரன்

குறுவை மற்றும் சம்பாவுக்கு போதியளவு உரங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ். தாமோதரன் தெரிவித்தார்.

திருச்சி, கரூர், அரியலூர் மாவட்டங்களின் சம்பா- தாளடி சாகுபடி முன்னேற்பாடு குறித்து திருச்சியில் விவசாயிகளுடன் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

தமிழ்நாட்டில் நடப்பாண்டில் காவிரியாற்றில் உரிய நேரத்தில் குறுவைக்கு பாசன நீர் கிடைக்காததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தை அறிவித்து ரூ. 18 கோடி நிதியையும் முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன்படி, திருச்சி மாவட்டத்திற்கு ரூ. 74.6 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ள 8577 ஏக்கருக்குரிய 3872 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு இதில் 5000 ஏக்கருக்குரிய விவசாயிகளுக்கு உயிர் உரங்கள், நுண்சத்து, மற்றும் தாவரப் பூச்சிக் கொல்லி மருந்துகள், 1500 ஏக்கருக்கு ஜிப்சம் மற்றும் பாசன நீர் விரையமாவதைத் தடுக்க ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 180 மீ௦ட்டர் நீளத்துக்கு 325 யூனிட் பைப்புகள் விலையேதுமின்றி வழங்கப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் சம்பா பயிர் சாகுபடி டெல்டா பகுதிகளில் 92,200 ஏக்கரிலும், இதர பகுதிகளில் 57,800 ஏக்கரிலும் செய்யப்படவுள்ளது. இதில் 90, 000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறை பின்பற்றப்படவுள்ளது. கடந்த ஆக. 2-ஆம் தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி விதைகள், உரங்கள் மற்றும் கூட்டுறவு வங்கி மூலம் கடன்கள் வழங்கிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

குறுவை மற்றும் சம்பா பருவத்துக்கு தேவையான உரங்களான யூரியா 7417 மெட்ரிக் டன், டிஏபி 5875 மெட்ரிக் டன், பொட்டாஸ் 3334 மெட்ரிக் டன் மற்றும் கலப்பு உரம்

6242 மெட்ரிக் டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார் தாமோதரன்.

கூட்டத்தில், கதர் மற்றும் கிராமத் தொழிóல்கள் துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி, அரசுத் தலைமைக் கொறடா ஆர். மனோகரன், அரசு முதன்மைச் செயலர் மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா, வேளாண்மைத் துறை இயக்குநர் மு. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் ஜெயசிறீ முரளிதரன், எம்எல்ஏக்கள் மு. பரஞ்ஜோதி, என்.ஆர். சிவபதி, ஆர். சந்திரசேகர், மாவட்ட ஊராட்சித் தலைவர் தி. ராஜாத்தி ஆகியோர் பங்கேற்றனர்.

விவசாய சங்கங்களின் சார்பில் காந்திபித்தன், பொ. அய்யாக்கண்ணு, சி.மாசிலாமணி, புலியூர் நாகராஜன், அயிலை சிவசூரியன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

## நிகழாண்டு 1.20 கோடி டன் உணவு உற்பத்தி செய்ய இலக்கு

தமிழகத்தில் நிகழாண்டு 1.20 கோடி டன் உணவு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இந்த இலக்கை கண்டிப்பாக எட்டிவிடுவோம் என்று மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் செ. தாமோதரன் தெரிவித்தார்.

தஞ்சாவூர் அருகேயுள்ள களிமேடு கிராமத்தில் வியாழக்கிழமை பிற்பகல் நடவு இயந்திரம் மூலம் சம்பா நெல் நடவுப் பணி மேற்கொள்ளப்பட்டதைப் பார்வையிட்ட அவர் பின்னர் அளித்த பேட்டி:

தமிழகத்தில் நிகழாண்டு 1.20 கோடி டன் உணவு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விதைநெல் டெல்டா மாவட்டங்களில் மட்டுமல்லாமல், நெல் சாகுபடி செய்யப்படும் அனைத்து இடங்களிலும் விவசாயிகளுக்குத் தேவையான அளவு கிடைக்கிறது. வேளாண்மைத் துறையை இயந்திரமயமாக்கத் தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார். இதன்படி, வேளாண்மைத் துறையில் புதிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இதில் நெல் நடவு இயந்திரம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. நெல் நடவு செய்வதில் வரிசையாக நடவு செய்வது மிகவும் முக்கியம். இந்த இயந்திரத்தில் வரிசையாக நடவு செய்ய முடிகிறது. மேலும், இந்த இயந்திரம் மூலம் ஆள் பற்றாக்குறை உள்ள நிலையில் அப்பிரச்னை தீர்க்கப்படுகிறது.

மேலும், இந்த இயந்திரத்தின் மூலம் செலவு குறைவதுடன், அதிக மகசூலும் கிடைக்கிறது. இந்த வாய்ப்புகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கலாம் என்றார் தாமோதரன்.

முன்னதாக, அவர் களிமேட்டில் அமைக்கப்பட்டிருந்த திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்று விடும் முறை, இடுபொருள்கள் பயன்படுத்தப்படும் அளவு உள்ளிட்டவை குறித்த கருத்துக் காட்சியையும், லேசர் நிலம் சமன்படுத்தும் இயந்திரத்தின் மூலம் நிலம் சமப்படுத்தப்பட்டதையும் பார்வையிட்டார். மேலும், நெல் நடவு இயந்திரம் மூலம் நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டதைப் பார்வையிட்டார். இதனிடையே, அவரே நெல் நடவு இயந்திரத்தை ஓட்டி நடவு செய்தார்.

இந்த ஆய்வின்போது, சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி (தஞ்சாவூர்), எம். ரெத்தினசாமி (திருவையாறு), இரா. துரைக்கண்ணு (பாபநாசம்), வேளாண்மைத் உற்பத்தி ஆணையரும், முதன்மைச் செயலருமான சந்தீப் சக்சேனா, வேளாண்மைத் துறை இயக்குநர் எம். ராஜேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## துவரையில் அதிக லாபம் பெற புதிய தொழில்நுட்பம்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் துவரை சாகுபடியில் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் அதிக லாபம் பெறலாம்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பயறுவகை பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்த புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே துவரையை நாற்றாங்கால் முறையில் சாகுபடி செய்யும் தொழில் நுட்பமாகும்.

இத்திட்டத்தில் ரூ. 7,500 மதிப்பில் வேளாண் இடுபொருள்கள் மானியமாக வழங்கப்படுகின்றன. ஹெக்டேருக்கு 2.5 கிலோ விதை போதுமானதாகும்.

2.5 கிலோ விதைகளை 2 சத கால்சியம் குளோரைடு கரைசலில் ஒரு மணி நேரம் ஊறவைத்து, அதை 7 மணி நேரம் உலர்த்தி, 100 கிராம் ரைசோபியம், 100 கிராம் பாஸ்போபாக்டீரியா, 10 கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

6க்கு 4 அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் செம்மண், மணல், குப்பை கலந்த கலவையை நிரப்பி, ஒரு பைக்கு 2 விதைகள் வரை ஊன்ற வேண்டும். பைகளில் நீர் தேங்காமல் இருக்க 2-லிருந்து 3 துளைகள் போடலாம்.

ஹெக்டேருக்கு (6,050) பைகள் தயார் செய்து, நிழற்பாங்கான இடங்களில் வைத்து தேவையான தருணங்களில் பூவாளியின் மூலம் நீர் ஊற்றி, நாற்று தயார் செய்ய வேண்டும். 25 -லிருந்து 30 நாள்கள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்யலாம்.

முதல் மழையைப் பயன்படுத்தி நடவு வயலைத் தயார் செய்து கொள்ள வேண்டும். நன்றாக உழவு செய்த வயலில் 30 நாள் ஆன நாற்றுகளை, மழை பெய்தவுடன் வரிசைக்கு வரிசை 6 அடி செடிக்கு 3 அடி என்ற இடைவெளியில் நடவுக்கு 6 அங்குலம் குழி எடுத்து பைகளிலுள்ள 2 நாற்றுகளை, மழை பெய்த மாலை வேளையில் நட வேண்டும்.

செடி வளர்ந்தவுடன் இரண்டில் ஒன்றைக் களைந்துவிட வேண்டும். நடவு செய்த 20 முதல் 30 நாள்களுக்குள், செடியின் நுனியை ஒரு அங்குலம் கிள்ளியெடுக்க வேண்டும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகமும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடித்து துவரைச் சாகுபடியில அதிக லாபம் பெறலாம்.

அதிக மகசூல் திறனைப் பெறுவதற்கு, சொட்டு நீர் பாசன முறையில் நீரில் கரையும் உரங்களைப் பரிந்துரையின் அடிப்படையில் இட வேண்டும்.

துவரை நாற்று விட்டு நடவு செய்வதன் மூலம், பயிர் எண்ணிக்கை முழுமையாக பராமரிக்கப்படுகிறது.

மேலும், ஒரு மாத காலம் பயிர் வயலில் இருப்பது குறைவதோடு, 3,750 கிலோ வரை ஹெக்டேருக்கு மகசூல் பெறலாம். மேலும் விவரங்களுக்கு பெரம்பலூர் வேளாண் உதவி இயக்குநர் (9047072766), வேப்பூர் வேளாண் உதவி இயக்குநர் (9047072763), ஆலத்தூர் (9047072764), வேப்பந்தட்டை (9047072768) ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம்

## கேக்கரை வாய்க்காலைத் தூர்வாராததால் 956 ஏக்கரில் விவசாயம் பாதிப்பு

கேக்கரைப் பகுதிக்கு செல்லும் பாசன வாய்க்காலைத் தூர்வாராததால் 956 ஏக்கரில் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

திருவாரூர் மாவட்டத்தில் வெட்டாறு, பாமணியாறு, ஓடம்போக்கி ஆறு மற்றும் சிறு கால்வாய்கள் என 20-க்கும் மேற்பட்ட பாசனக் கிளை வாய்க்கால்கள் ஓடுகிறன. திருவாரூர் நகருக்குள் பாயும் ஓடம்போக்கி ஆற்றிலிருந்து அம்மாதோப்பு என்ற இடத்தில் பி12 என்ற பெயரில் கேக்கரை வரை நகருக்குள் சுமார் 7 கி.மீ. தூரத்துக்குச் செல்லும் வாய்க்கால் மூலம் (கேக்கரை பகுதியில்) 956 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

தொடக்கத்தில் 180 அடியாக இருந்த இவ்வாய்க்கால் தற்போது சுமார் 10 அடி அளவிலே சுருங்கி (ஆக்கிரமிப்பில்) உள்ளது. நீண்ட நாள்களாகத் தூர்வாராததால் தற்போது இவ்வாய்க்கால் தாமரை, முள்கள் மண்டி நீர் வழித்தடம் தடைபட்டுள்ளது. பல ஆண்டுகளாகப் பாசனத்துக்குப் பயன்பட்டு வந்த இந்த வாய்க்கால் தற்போது கழிவுநீர் தேங்கி நிற்கும் சாக்கடையாக உள்ளது.

மழைக் காலங்களில் இவ்வாய்க்காலில் நீர் வடிய வாய்ப்பில்லாமல், வாய்க்கால் இருக்கும் 1,4,5,6,7,9 ஆகிய வார்டு பகுதி குடியிருப்புகளில் நீர் சூழ்ந்து போக்குவரத்துக்கு வழியின்றி, குட்டைபோல நீர் தேங்கிவிடுகிறது. அது பல நாள்களுக்கு வடிய வாய்ப்பில்லாததால் கொசு உற்பத்தியாகி, மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாய்க்காலைத் தூர்வார விவசாயிகள் குறைதீர் கூட்டத்திலும், நகராட்சிக் கூட்டங்களில் வலியுறுத்தியும் எந்த நடவடிக்கையும் இல்லையாம். மழைக் காலத்தில் நீர் தேங்கும்போது மட்டும் அரசு அலுவலர்கள் பார்வையிடுகின்றனர். வேறு நடவடிக்கை எதுவும் மேற்கொள்வதில்லையென்றனர் அப்பகுதி மக்கள்.

இதுகுறித்து நகராட்சி உறுப்பினர் ஜி. வரதராஜன் கூறியது:

சில ஆண்டுகளுக்கு முன் இந்த வாய்க்கால்களில்தான் மக்கள் குளித்தனர். தற்போது மாசடைந்த நீராக உள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இவ்வாய்க்காலைத் தூர்வார வேண்டும் என்றார் அவர்.

குடிநீரில் கழிவுநீர் கலக்கும் அபாயம்: வாய்க்கால் குறுக்கே பாலாஜி நகர், நல்லப்பா நகர் பகுதிகளுக்கு குடிநீர்க் குழாய் செல்கிறது. குடிநீர்க் குழாயைத் தொட்டுக்கொண்டு கழிவுநீர் செல்வதால் குடிநீரில் கழிவு நீர் கலக்கும் அபாயம் உள்ளதால் நகராட்சி நிர்வாகம் இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## ஆந்த்ராக்ஸ் நோய் பாதிப்பு அரசுக்கு காங்., வலியுறுத்தல்

புதுச்சேரி : புதுச்சேரியில், கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் நோய் பரவாமல் தடுக்க, அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என காங்., வலியுறுத்தியுள்ளது. இது குறித்து காங்., செய்தி தொடர்பாளர் வீரராகவன் வெளியிட்டுள்ள அறிக்கை: விழுப்புரம் மாவட்டத்தில் நொளம்பூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் ஆந்த்ராக்ஸ் நோய் பாதிப்பால் நூற்றுக்கும் மேற்பட்ட கறவை மாடுகள் உயிரிழந்துள்ளன. இந்நிலையில், புதுச்சேரி மாநிலத்தின் எல்லையோர கிராமங்களில் உள்ள மாடுகளுக்கு இந்த கொடிய நோய் பாதிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. புதுச்சேரி மாநிலத்திற்கும் தமிழக பகுதிக்கும் இடையில் உள்ள மாட்டு சந்தைகளின் வாணிப பரிமாற்றத்தின் மூலம் நோய் பரவ வாய்ப்பு உள்ளது. இதுகுறித்து, அரசு

இதுவரை எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதுச்சேரியில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஆந்த்ராக்ஸ் நோய் பாதிப்பால், கிராமப் புறங்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்தன. மீண்டும் அதுபோன்ற நிலை ஏற்பட்டு விடக் கூடாது. எனவே, புதுச்சேரி அரசு, உரிய மருத்துவ நிபுணர் குழு மூலம் முகாம்கள் அமைத்து, தாமதமின்றி உரிய நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு தடுப்பூசி போட வேண்டும்.

## நடமாடும் கால்நடை மருத்துவமனை திட்டம்... பல கிராமங்களில் விவசாயிகள் பாதிப்பு

காஞ்சிபுரம்:கால்நடைகளுக்கு, விரைந்து சிகிச்சை அளிக்க வசதியாக, துவக்கப்பட்ட கால்நடை மருத்துவமனைகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில், முடங்கி உள்ளன. இதற்கு வாகன பழுது, அதிகாரிகள் மெத்தனம் உள்ளிட்டவை காரணங்களாக முன்வைக்கப் படு-கின்றன. தமிழகத்தில், 5 கி.மீ., ஆரத்திற்கு ஒன்று என்ற முறையில், கால்நடை மருத்துவம-னைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது, அரசின் இலக்கு. காஞ்சிபுரம் மாவட்டத்தில், இது 10 கி.மீ., துாரத்தில் உள்ளது. இதனால், டிராக்டர் அல்லது மினி லாரியில் கால்நடை-களை ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய நிலையில் விவசாயிகள் இருந்தனர். இந்த நிலையை மாற்ற, கடந்த 2005ம் ஆண்டு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், சிட்லபாக்கம் ஆகிய கால்நடை துறை உதவி மண்டலங்களில், தலா ஒரு நட-மாடும் மருத்துவமனை துவக்கப்பட்டது. இவற்றில், ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு ஆய்வாளர், இரண்டு உதவியாளர் என, 4 பேர் பணி அமர்த்தப்பட்டு இருந்தனர். இவர்கள் அந்தந்த உதவி மண்டலங்களுக்கு உட்பட்ட கிராமங்களுக்கு சென்று சிகிச்சை அளித்து வந்தனர், பழுது ஆனால், காலப் போக்கில், அதிகாரிகளின் மெத்தனத்தால் திட்டம் படிப்-படியாக முடங்க துவங்கியது. கடந்த ஆறு மாதங்களாக இந்த திட்டம் முழுமையாக முடங்-கிவிட்டதாக தெரிகிறது. காஞ்சிபுரம், மதுராந்தகம் உதவி மண்டலங்களின் வாகனங்கள் பழுதடைந்து, பல மாதங்களாக, காட்சிப்பொருட்களாக உள்ளன. மற்ற இரண்டு உதவி மண்டலங்களிலும், திட்டத்திற்கான வாகனங்கள் கால்நடை துறையின் பிற பணிகளுக்-காக பயன்படுத்தப் படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், பல கிராமங்களில், கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டு உள்ளது. நடமாடும் மருத்துவமனையில் பணியாற்றியவர்கள் இருசக்கர வாகனங்களில் கிராமங்களுக்கு

சென்று வருவதாக அதிகாரிகள் கூறினர். 'ஒப்புதல் கிடைத்தால்...' இது குறித்து,காஞ்சி-புரம் மாவட்ட கால்நடைத்துறை உயரதிகாரி ஒருவர் கூறுகையில், ''மாவட்டத்தில் உள்ள இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவமனை வாகனங்கள் பழுது அடைந்துள்ளன. இவற்றை பயன்படுத்த முடியாது. இவற்றுக்கு பதிலாக, புதிய வாகனங்களை வழங்க வேண்டும் என, அரசுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பி உள்ளோம். அரசு அனுமதித்தால், நடமாடும் கால்நடை மருத்துவமனை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்,'' என்றார்.

வாகன பழுதை காரணம் காட்டி தாமதிப்பதும், வாகனங்களை வேறு வேலைகளுக்கு பயன்படுத்துவதும் அதிகாரிகளுக்கு திட்டத்தை செயல்படுத்துவதில் ஆர்வமில்லாத நிலையை சுட்டிக் காட்டுகின்றன. முதல்வர் இலவச கால்நடை களை வழங்கி, அவற்றிற்கு தீவனம் தயாரிக்க மானியமும் வழங்கி வரும் நிலை யில்; குக்கிராமங்களில் ஏழை எளிய மக்கள் பெறும் கால்நடைகளின் சுகாதாரத்தை பராமரிக்க இத்தகைய திட்டம் மிகவும் அவசியமானது.

## எருமைக்கு காம்பு வீக்க நோய் சிகிச்சைக்கு டாக்டர் அழைப்பு

ப.வேலூர்: ப.வேலூர் பகுதியில், எருமை கறவை மாடுகளுக்கு, காம்பு வீக்க நோய் ஏற்படுவதை தடுக்க, உரிய சிகிச்சையை பெற வேண்டும் என கால்நடை டாக்டர் தெரிவித்தார். நாமக்கல் மாவட்டத்தில், கால்நடைகள் வளர்ப்பு தொழிலை, ஆயிரக்கணக்கானோர் செய்து வருகின்றனர். அதுவும், ப.வேலூர் பகுதி, காவிரி பாசனப் பகுதி என்பதால், ஏராளமான விவசாயிகள், கால்நடைகளை வளர்த்து, அதன் மூலம் ஜீவனம் நடத்தி வருகின்றனர். குறிப்பாக, எருமை (கறவை) மாடுகளை வளர்க்கும் விவசாயிகள், உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காமலும், கவனக்குறைவாக செயல்படுவதால், கறவை மாடுகளுக்கு காம்பு வீக்க நோய் ஏற்பட்டு வருகிறது. அதனால், ப.வேலூர் கால்நடை மருந்தகத்துக்கு, எருமை மாடுகளின் காம்பு வீக்க நோய் பாதிப்பு மாடுகள் அதிகமாக வருகின்றன. கால்நடை டாக்டர் செங்கோட்டையன் கூறியதாவது: எருமை (கறவை) மாடுகள் வைத்திருப்போர், மாடு பிரசவமாகும் ஒருவாரத்திற்கு முன்பும், பிரசவமான ஒரு மாதத்திற்கு பின்பும், கம்பு, சோளம், பாசிப்பயறு, புண்ணாக்கு, பயிறுவகை செடிகளை உணவாக வழங்கக் கூடாது. அவ்வாறு கொடுத்தால், மாட்டின்

காம்பு வீங்கி புண்ணாகும். உரிய சிகிச்சை எடுக்காமல், மிளகா சுற்றிப் போடுதல், பாடம் போடுதல் ஆகிய செய்கைகளை செய்யக் கூடாது. தொடர் சிகிச்சை மூலமே, காம்பு வீக்க நோயினை கட்டுப்படுத்த முடியும். அதற்காக, அரசின் கால்நடை மருந்தகத்தில் இலவச மருத்துவ சிகிச்சைப் பெற்றுக் கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

## மலர் குளிர் பதன கிடங்கு தோட்டக்கலை துறை மானியம்

கிருஷ்ணகிரி: ரோஜா மலர்களை, 15 நாட்கள் வரை வைத்திருந்த விற்பனை செய்ய குளிர்பதன கிடங்கு அமைக்க தோட்டக்கலை துறை மானியம் வழங்குகிறது. தோட்டக்கலை துறை துணை இயக்குனர் மோகன் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மலர் பயிர்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. இதில், ரோஜா மலர் முக்கிய இடத்தை வகிக்கிறது. மாவட்டத்தில், சூளகிரி, ஓசூர், கெலமங்கலம் மற்றும் தளி வட்டாரங்களில், 150 ஏக்கரில் பசுமை குடில் அமைக்கப்பட்டு ரோஜா மலர் சாகுபடி நடக்கிறது. ரோஜா மலர்களை பறித்தவுடன் விற்பனை செய்யாமல் குளிர்பதன கிடங்கில், 15 நாட்கள் வரை வைத்திருந்து நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியும். இவ்வாறு குளிர்பதன கிடங்கில் ரோஜாவை வைத்து விற்பனை செய்வதால் பூவின் தரமும், பூவின் பருமனும் நன்றாக இருப்பதோடு அதிக விலைக்கு விற்பனையாகும். இதை ஊக்குவிக்க தோட்டக்கலை துறை மூலம் குளிர்பதன கிடங்கு அமைக்க அதிக பட்சமாக, 40 சதவீதம் மானியம், 6 லட்ச ரூபாய் வரை வழங்கப்படுகிறது. திட்ட வடிவில் வங்கி மூலம் கடன் பெற்று இந்த மானியத்தை ரோஜா சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் பெற்றுகொள்ளலாம். மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் அந்தந்த பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சரணாலயத்தில் நீர்மட்டம் உயர்வு: தொடர் மழைக்கு எதிர்பார்ப்பு

ஈரோடு: ஈரோடு அடுத்த வெள்ளோடு பறவைகள் சரணாலய ஏரியின் நீர் மட்டம் சற்று உயர்ந்ததால், வனத்துறையினர் நிம்மதி அடைந்துள்ளனர். தொடர் மழை பெய்ய வேண்டுமென, எதிர்பார்ப்பில் வனத்துறையினர் உள்ளனர். ஈரோட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களில் மிக முக்கியமானது, வெள்ளோடு பறவைகள் சரணாலயம். 200 ஏக்கரில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்தை, ஈரோடு மாவட்ட வனத்துறையினர் பராமரித்து வருகின்றனர். சரணாலயத்தில் உள்ள ஏரி, கீழ்பவானி கால்வாயின் கசிவு

நீரால் நிரம்புவதால், எம்மாதத்திலும் தண்ணீர் இருக்கும். பருவமழை பொய்த்ததால், கீழ்பவானி கால்வாய் வறண்டதால், சரணாலய ஏரியும் முற்றிலும் வறண்டது. சரணாலய ஏரியில், வனத்துறையினரால் வளர்க்கப்பட்ட மெகாசைஸ் மீன்கள் யாவும் செத்து மிதந்தன. சரணாலய ஏரி வறண்டதாலும், இரை கிடைக்காததாலும், சரணாலயத்தில் தஞ்சம் புகுந்த, அயல்நாடு, உள்நாட்டு பறவைகள் இடம் பெயர்ந்ததால், சரணாலயம் வெறிச்சோடியது. இந்நிலையில், வெள்ளோடு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், சில தினங்களாக மழை பெய்ததாலும், எல்.பி. பி.,யில் தண்ணீர் திறக்கப்பட்டதாலும், சரணாலய ஏரியின் நீர்மட்டம் சற்று உயர்ந்தது. மண்டல வனப்பாதுகாவலர் வெங்கடேஷ் கூறியதாவது:

வெள்ளோடு பகுதியில் பெய்த மழையாலும், கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டதாலும், பறவைகள் சரணாலயத்தில், நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பறவைகளை வரவேற்க, ஆங்காங்கே செயற்கை மண் திட்டுகள் உருவாக்கும் பணி நடந்து வருகிறது. பெலிகான், கொசுஉல்லான், வண்ணநாரை உள்ளிட்ட பறவைகளும், இந்திய பறவைகளான சாம்பல்நாரை, ராமக்கோழி, ஜெம்புகோழி, பாம்புத்தாரா உள்ளிட்ட பறவைகள் வந்துள்ளது. ஏரியின் நீர்மட்டம் உயர்ந்தால், மேலும் பறவைகளின் வரத்து அதிகரிக்கும், என்றார்.

## ஆராய்ச்சி மையத்தில் புதிய நெல் :ண விவசாயத்துக்கு எதிர்காலம் நிச்சயம்

கூடலூர் : கூடலூர் புளியாம்பாறையில் உள்ள, வீரிய ஒட்டு நெல் மையத்தில், பல வகை நெற்கள் நடவு செய்யப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் சார்பில், 1996ம் ஆண்டு முதல் இருவழி "வீரியம் ஒட்டு நெல் ஆராய்ச்சி மையம்' கூடலூரில் செயல்பட்டு வருகிறது. துவக்கத்தில், மண்வயல் கோலூரில் குத்தகை இடத்தில் செயல்பட்டு வந்த மையம், தற்போது, புளியாம்பாறையில் சொந்த இடத்துக்கு மாற்றப்பட்டு நெல் ஆராய்ச்சி பணிகள் தொடர்கின்றன. இங்கு, நிலவும் மிதமான வெப்பநிலையில், ஆண் மலட்டுத் தன்மையுள்ள நெல்லுக்கு, இயற்கையாக அதன் தன்மை மாறுவதை கண்டு பிடித்துள்ளனர். மலை பிரதேசங்களில் வளர கூடிய, பல நெல் ரகங்களை, அதிக மகசூல் மற்றும் நோய் எதிர்ப்புடன் கூடிய ரகமாக மாற்றும் ஆராய்ச்சியில் இங்குள்ள ஆய்வாளர்கள்

ஈடுப்பட்டுள்ளனர். மேலும், ஏராளமான நெல் வகைகளை தனித்தனியாக நடவு செய்து, அதனை தாக்கும் நோய்களை கண்காணித்து தடுக்கும் வழிகளையும் ஆராய்ந்து வருகின்றனர். சமீபத்தில் கோவையில் அறிமுகப்படுத்தப்பட்ட "கோ-50' நெல் வகையை, 10 விளை நிலங்களில், ஆராய்ச்சிக்காக பயிரிட்டு கண்காணித்து வருகின்றனர். இது குறித்து ஆராய்ச்சி மையத்தின் தலைவர் பேராசிரியர் மனோர்மணி கூறுகையில், ""ஆண் மலட்டு தன்மையுள்ள, பெண் ரக நெல் உற்பத்தி செய்ய இரவில் 18 செ.கிரேடு, பகலில் 24 செ.கிரேடு., வெப்ப நிலை தேவை. இந்த காலநிலை, தேசிய அளவில், நீலகிரி மாவட்டம் கூடலூரில் மட்டுமே உள்ளதால், இங்கு, "வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையம்' துவங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இருவழி வீரிய ஒட்டு நெல் உற்பத்தியால், இங்குள்ள விவசாயிகளுக்கும் நல்ல எதிர்காலம் உள்ளது,'' என்றார்.

## 120 லட்சம் டன் உணவு உற்பத்தி இலக்கு வேளாண்மைத்துறை அமைச்சர் தகவல்

தஞ்சாவூர்: ""தமிழகத்தில் இந்த ஆண்டு, 120 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்ய, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது,'' என, வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார். தஞ்சாவூர் அருகேயுள்ள களிமேடு சக்கரசாம்மந்தம் கிராமத்தில், நடவு இயந்திரம் மூலம் சம்பா நெல் நடவுப் பணி மேற்கொள்ளப்பட்டதை பார்வையிட்டார். திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்றுவிடும் முறை, இடுபொருட்கள் பயன்படுத்தப்டும் அளவு உள்ளிட்டவை குறித்த கருத்துக் காட்சியையும், லேசர் நிலம் சமன்படுத்தும் இயந்திரத்தின் மூலம் நிலம் சமப்படுத்தப்பட்டதை பார்வையிட்டு, நெல் நடவு இயந்திரத்தை ஓட்டி நடவு செய்தார். எம்.எல்.ஏ.,க்கள் ரெங்கசாமி, ரெத்தினசாமி, துரைக்கண்ணு, வேளாண்மை உற்பத்திய ஆணையரும், முதன்மை செயலாளருமான சந்தீப் சக்சேனா, வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அப்போது அமைச்சர் தாமோதரன் கூறியதாவது:

வேளாண்மைத்துறையை, இயந்திரமயமாக்க வேண்டும், என்று தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, வேளாண்மைத்துறையில், புதிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதில், நெல் நடவு இயந்திரம், 50 சதவீத மானியத்தில்

வழங்கப்பட்டு வருகிறது. நெல் நடவு செய்வதில், ஆள் பற்றாக்குறை பிரச்னை, இயந்திரம் மூலம் தீர்க்கப்படுகிறது. இந்த இயந்திரத்தின் மூலம் செலவு குறைவதுடன் அதிக மகசூலும் கிடைக்கிறது. இந்த வாய்,ப்புகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு உற்பத்தியை பெருக்கலாம். தமிழகத்தில் இந்தாண்டு, 120 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்ய, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் மட்டுமின்றி, நெல் சாகுபடி செய்யப்படும் அனைத்து இடங்களிலும், விவசாயிகளுக்கு தேவையான அளவு விதை நெல் கிடைக்கிறது. இவ்வாறு அமைச்சர் தாமோதரன் கூறினார்.

## துவரை நாற்று நடவு செய்ய புதிய தொழில்நுட்பம்

திண்டுக்கல் : துவரை நாற்று விட்டு, நடவு செய்வதில் புதிய தொழில்நுட்பட்பத்தை வேளாண்மைத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுகுறித்து, திண்டுக்கல் வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) சின்னச்சாமி கூறியதாவது:

துவரையை ஊடு பயிராக, பயிரிடுவதால், உற்பத்தி குறைவாக உள்ளது. உற்பத்தியை பெருக்குவதற்காக, புதிய தொழில்நுட்பமாக, துவரை நாற்று விட்டு, நடவு செய்யும் முறையை, வேளாண்மைத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், 130 முதல் 140 நாட்கள் வயதுடைய, ஐ.சி.பி.எல்., 88039 என்ற ரகம் பயிரிட வேண்டும். ஜுன்-ஆகஸ்ட் மாதங்களில் பயிரிட வேண்டும். ஒரு ஏக்கருக்கு, ஒரு கிலோ விதை போதும். ஊடு பயிராக, உளுந்து, பாசி பயிறு பயிரிட வேண்டும். 50-60 நாட்களில், நுனியை கிள்ள வேண்டும். இதில், மசூலாக, 700 முதல் ஆயிரம் கிலோ வரை கிடைக்கும். புதிய தொழில்நுட்பம் குறித்து மேலும் தகவல்களுக்கு வேளாண்மை அலுவலகத்தை அணுகி விவசாயிகள் அறிந்துகொள்ளலாம், என்றார்.

## சிங்கப்பூர் செல்லும் தேனி வெண்டைக்காய்

தேவதானப்பட்டி:பெரியகுளம், ஆண்டிபட்டி பகுதியில் உற்பத்தியாகும் வெண்டைக்காய் தரம் பிரிக்கப்பட்டு, திருச்சியில் இருந்து விமானத்தில் சிங்கப்பூருக்கு அனுப்பப்படுகிறது. பெரியகுளம் தாலுகாவில் கரும்பு, வாழை,வெற்றிலைக்கொடி மற்றும் நெல் சாகுபடி முக்கியத் தொழிலாக உள்ளது. சில விவசாயிகள் காய்கறி பயிர்களான தக்காளி, கத்தரிக்காய்,வெண்டைக்காய், அவரை, பீன்ஸ், முட்டைக்கோஸ் போன்றவற்றை சாகுபடி செய்து வருகின்றனர். விளை பொருட்களை அருகில் உள்ள சந்தைகளுக்கு

விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். பெரும்பாலும் விளைச்சல் அதிகமாக இருக்கும் காலங்களில் விலை கிடைப்பதில்லை. விலை இருந்தால் உற்பத்தி குறைவாக இருக்கும். ஒரே சீராக விலை இல்லாததால் உற்பத்தி செலவிற்கும், விற்பனையாகும் விலைக்கும் கட்டுபடியாகாமல் விவசாயிகள் நஷ்டம் ஏற்பட்டு சிரமப்படுகின்றனர். பெரியகுளம் தாலுகா முதலக்கம்பட்டி, ஆண்டிபட்டி தாலுகா புள்ளிமான்கோம்பை, பெருமாள்பட்டி உட்பட சில கிராமங்களில் விவசாயிகள் உயர் ரக வெண்டைக்காய் சாகுபடி செய்துள்ளனர். இவ்வகைக் காய்கள் நீளமாகவும், பார்ப்பதற்கு பச்சையாகவும் காணப்படுகின்றன. செடியில் இருந்து பறிக்கப்படும் வெண்டைக்காய் தரம் பிரிக்கப்பட்டு, முதல்தரக்காய்களை 10 கிலோ வீதம் பெட்டிகளில் அடைத்து ஆண்டிபட்டிக்கு அனுப்புகின்றனர். அங்கிருந்து திருச்சி கொண்டு செல்லப்பட்டு விமானத்தில் சிங்கப்பூர் அனுப்பப்படுகிறது. தரம் பிரித்து அனுப்பப்படும் வெண்டைக்காய்களுக்கு உள்ளூர் சந்தையில் விற்பனையாகும் விலையை விட, கிலோவிற்கு 10 ரூபாய் வரை கூடுதல் விலை தரப்படுகிறது. வியாபாரிகளே தோட்டங்களுக்கு நேரில் வந்து பேக்கிங் செய்து எடுத்துச் செல்வதால் பிரச்னை இல்லை

## "அட்மா' திட்ட பயிற்சி

விருதுநகர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில், அட்மா திட்டத்தின்கீழ், மாநில அளவிலான பயிற்சி நடந்தது. உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் செண்பகராஜ் தலைமை வகித்தார். இதில், சிவகாசி வட்டாரத்தைச்சேர்ந்த 50 விவசாயிகள் கலந்துகொண்டனர். மானாவாரியில் பருத்தி சாகுபடி தொழில் நுட்பங்கள், விதையளவு, விதை நேர்த்தி, களைக்கப்டுப்பாடு குறித்து பருத்தி ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் வீரபுத்திரன் விளக்கினார். மானாவாரி மற்றும் நெல் தரிசில் பயிரிடக்கூடிய பருத்தி ரகங்கள் குறித்து ஞானசேகரன் விளக்கினர். பருத்தியில் ஒருங்கிணைந்த உரநிர்வாகம், மண்பரிசோதனைப்படி உரமிடுதல், ஊட்டச்சத்து குறைபாட்டின் அறிகுறிகள், இலை வழி உரம் தெளித்தல், உண்ணூட்டச்சத்துக்கள் இடுதல் குறித்து உதவி பேராசிரியர் கோமதி விளக்கினார். பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கான, ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறைகள் குறித்து பேராசிரியை சாந்தி விளக்கினார். பயிற்சி ஏற்பாடுகளை உழவர் பயிற்சி நிலைய ளோண் அலுவலர் சுந்தரவள்ளி செய்திருந்தார்.

## கரும்பு விவசாயிகளையும் விட்டு வைக்கவில்லை வறட்சி மண்டை வெல்லத்திற்கு போதிய விலை இன்றி தடுமாற்றம்

ஸ்ரீவில்லிபுத்தூர் : வறட்சியானது,கரும்பு விவசாயிகளையும் விட்டு வைக்கவில்லை. இதில் உற்பத்தி செய்யப்படும் மண்டை வெல்லத்திற்கும் போதிய விலை இல்லாமல், வருமானம் இன்றி,தடுமாற்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர். விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில், 500க்கு மேற்பட்ட ஏக்கர்களில் விவசாயிகள், கரும்பு பயிர் செய்கின்றனர். இதிலிருந்து, இப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மண்டை வெல்லம்,நாகர்கோவில், கேரளா திருவனந்தபுரம், கோட்டயம், போன்ற பகுதிகளுக்கு, லாரிகளில் தினமும் அனுப்பபட்டு வருகிறது. கடுமையான வறட்சி நிலவி வரும் நிலையிலும், கிணறு, போர்வெல்களில் கிடைக்கும் குறைந்தளவு நீரினை கொண்டு, விவசாயம் செய்து வருகின்றனர். இங்கு விளையும் கரும்பை, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும், சிலர், இதை கொண்டு,சொந்தமாக மண்டை வெல்லமும் தயார் செய்கின்றனர். ஒரு ஏக்கரில் விளைவிக்ககூடிய கரும்பை, 11 மாதங்கள் ஆன நிலையில், அதை வெட்டி, மண்டை வெல்லம் உற்பத்திக்கு பயன்படுத்துவர். இதன் மூலம், ஏக்கருக்கு 35 குவிண்டால் வெல்லம் கிடைக்கும். தற்போது தண்ணீர் பற்றாக்குறையால், ஏழு மாத கரும்பை வெட்டி, மண்டை வெல்லம் உற்பத்திக்கு பயன்படுத்துகின்றனர். ஏக்கருக்கு 26 குவிண்டால் மட்டுமே உற்பத்தி செய்ய முடிகிறது. மண்டை வெல்லத்தின் மஞ்சள் நிறமும் குறைவாகவே காணப்படுகிறது. இதன்காரணமாக கிலோவிற்கு 30 முதல் 35 ரூபாயே கிடைத்து வருகிறது. வருமானம் பாதித்த நிலையில், விவசாயிகள் தடுமாற்றத்தில் உள்ளனர். இது மட்டுமன்றி,ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் கரும்பு விளைநிலங்கள், ஸ்ரீவி.,சாம்பல் நிற அணில்கள் சரணலாய பகுதியை யொட்டி இருப்பதால் ,மான், மிளா, காட்டு பன்றிகள் அதிகளவில் கரும்பு தோட்டங்களில் புகுந்து, சேதத்தை விளைவிக்கிறது. ஏற்கனவே மழை இல்லாததால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், வன விலங்குகளாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ,நஷ்ட ஈடு கிடைப்பதிலும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. இதை தவிர்க்க, வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, விவசாயிகள் விரும்புகின்றனர். விவசாயி

ராமர்,""தண்ணீர் இல்லாததால், கரும்பு விளைச்சல் மிகவும் குறைந்து விட்டது. கரும்பு தோட்டத்தில் காட்டு பன்றிகள் புகுந்து, சேதப்படுத்தியதால் 4 ஏக்கரில் விளைவிக்கப்பட்ட கரும்புகள், நாசம் ஆகின. இதன் மூலம் 30 ஆயிரம் ரூபாய்க்கும் மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே மண்டை வெல்லத்திற்கு விலை இல்லாத நிலையில், விலங்குகளாலும் பாதிக்கப்பட்டு வருகிறோம்," என்றார். விவசாயி சுப்பிரமணியன்,"" தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்புக்கு குவிண்டாலுக்கு 2,300 ரூபாய் வழங்கி வருகிறது. இதில் வெட்டும் கூலியை, நாங்களே கொடுக்க வேண்டியதுள்ளது. வெட்டு கூலியை ஆலைகளே ஏற்பதோடு, குவிண்டாலுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்கினால் மட்டுமே, விவசாயிகளுக்கு லாபம் ஏற்படும். அதனால் நாங்களே, சொந்தமாக ஆலை அமைத்து, மண்டை வெல்லம் உற்பத்தி செய்து வருறோம். அதுவும் போதிய லாபம் இல்லாத நிலையே உள்ளது," என்றார்.

தினகரன்

## ரூ.28.87 லட்சத்தில் அதிவிரைவு துவரை சாகுபடி வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

வேலூர்: வேலூர் அடுத்த காட்பாடி வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.27 லட்சத்தில் துவரை அதிவிரைவு பெருக்க தளைகள் பயிரிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.1 லட்சத்த 87 ஆயிரத்து 500 மதிப்பில் துவரை விளக்க தளைகள் பயிரிடப்பட்டுள்ளது. நவீன முறையில் பயிரிடப்பட்டுள்ள பெரியபுதூர், ஒட்டந்தாங்கல் மற்றும் சேவூர் ஆகிய கிராமங்களில் உள்ள விலை நிலங்களை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசுந்தர் நேற்று ஆய்வு செய்தார். அப்போது அடர்வு செடிகளை களைவது, இடைவெளி பராமரிப்பு, நுனி கில்லுதல், டிஏபி தெளித்தல் மற்றும் பூச்சி நோய் தடுப்பது குறித்த ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். இதில் காட்பாடி உதவி இயக்குனர் விஜயகுமார், வேளாண்மை அலுவலர்கள் முருகன், வெங்கடேசன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.